3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

நகராட்சியைத் தரம் உயர்த்துதல்

***5635—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மிக நேர்த்தியாக திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட நகரம். ஒரு குளத்தில் நீர் நிறைந்த பிறகு மறு குளத்திற்கு போய் நீர் விழும் அளவிற்கு கால்வாய் வசதிகள் இருக்கும் நகரம். நகரம் விஸ்தரிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறது; பரப்பளவும் அதிகமாகியிருக்கிறது. புதுக்கோட்டை நகரம், மருத்துவக் கல்லூரி,* smart city, *சித்த மருந்து தயாரிப்பு நிலையம், அரசு கல்லூரிகள், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், 100 ஏக்கரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என அனைத்து திசைகளிலும் அபார வளர்ச்சி அடைந்து வருகிறது. புதுக்கோட்டை*

நகராட்சியானது, மாவட்டத் தலைநகரில் அமைந்துள்ள தேர்வுநிலை நகராட்சியாகும். தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க சமஸ்தானமாக இருந்து, நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் எந்தவித நிபந்தனையுமின்றி கருவூலத்துடன் புதுக்கோட்டையை ஆண்ட மன்னரால் அது இந்தியப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

புதுக்கோட்டை நகராட்சி பழமை பொருந்திய, பெருமை வாய்ந்த நகராட்சியாகும். மேற்படி நகராட்சியையொட்டியுள்ள 9ஏ நத்தம்பண்ணை, 9பி நத்தம்பண்ணை, முள்ளூர், கவிநாடு கிழக்கு, கவிநாடு மேற்கு, திருமலைராயர்சமுத்திரம், திருக்கட்டளை மற்றும் தேக்காட்டூர் ஊராட்சிகளை புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்தால், அரசிடமிருந்து நகர்ப்புர வளர்ச்சிக்குத் தேவையான கூடுதல் நிதியினைப் பெற்று, அப்பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை தரமான முறையில் தேவையான அளவு ஏற்படுத்தித் தர ஏதுவாக இருக்கும். எனவே, புதுக்கோட்டை நகராட்சியினைத் தரம் உயர்த்தி, மாநகராட்சியாக அறிவிக்கக் கோரி, புதுக்கோட்டை நகராட்சிமூலம் ஏற்கெனவே 2021 ஆம் ஆண்டில் கருத்துரு அனுப்பப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நகராட்சியைத் தரமுயர்த்த வேண்டும் என்று கேள்வி இருக்கிறது.

டாக்டர் வை. முத்துராஜா: அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, புதுக்கோட்டை நகராட்சியினை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு கிட்டத்தட்ட 38 ஊராட்சிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. 28 நகராட்சிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. 6 நகராட்சிகள் மாநகராட்சிகளாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. அங்குள்ள ஜனத்தொகை 3 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தால்,

2023 ஜனவரி 13]

நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்தலாம் என்ற வகையில் அரசின் கொள்கை முடிவு இருக்கிறது. மாநகராட்சியாகத் தரமுயர்த்தும்போது அருகிலிருக்கின்ற கிராமங்களையும், அது ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் இந்தப் பகுதியுடன் இணைத்து 3 இலட்சத்திற்கும் அதிகமான ஜனத்தொகை இருந்தால், அதை மாநகராட்சியாகத் தரமுயர்த்தலாம்.

புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில், தற்போது ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 960 பேர் இருக்கிறார்கள். அந்தக் கணக்கின்படி, அருகிலிருக்கின்ற கிராமங்களை இணைத்தாலும் 3 இலட்சம் ஜனத்தொகைக்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், புதுக்கோட்டை நகராட்சியைச் சுற்றியுள்ள திருக்கட்டளை, தேக்காட்டூர், கவிநாடு மேலவட்டம், கவிநாடு கீழவட்டம், முள்ளூர், 9A நத்தம்பண்ணை, 9B நத்தம்பண்ணை, திருமலைராயர்சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளை இணைத்தால் புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்துவது சரியானதாக இருக்கும். தற்போது ஊராட்சிகளில் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பணியில் இருக்கிறார்கள். அந்தத் தலைவர்களுடைய பதவிக் காலம் முடியும்போதுதான் இந்த ஊராட்சிகளை புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைக்க முடியும். அவ்வாறு இணைக்கும்பட்சத்தில், புதுக்கோட்டையை மாநகராட்சியாகத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்கு வாய்ப்பு இருக்குமானால், உள்ளாட்சித் தேர்தல் மறுபடியும் நடைபெறும் சமயத்தில் அதைத் தரமுயர்த்துவது பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாக புதுக்கோட்டையில் கடும் குடிநீர் பஞ்சம் நிலவியபோது அதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருந்த நேரத்தில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாபெரும் திட்டமான காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி, புதுக்கோட்டை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முற்றிலுமாக நீக்கினார்கள். நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. நாம்*

ஆட்சிக்கு வந்த பிறகு அது சரிசெய்யப்பட்டு, தற்போது வாரம் ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால், புதுக்கோட்டை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் வகையில், அன்று சிறப்பு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தந்தையின்மூலம் குடிநீர்ப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டதுபோன்று, இன்று அவரது புதல்வராகிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதுக்கோட்டை மக்களின் தலையாய பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகராட்சிக்கு புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு 12 மில்லியன் லிட்டர் குடிநீரும், உள்ளூர் நீராதாரங்களைக் கொண்டு 2 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்ட காரணத்தால், அதற்காக அமைக்கப்பட்ட பைப்புகளெல்லாம் சில இடங்களில் பழுதடைந்திருக்கின்றன. அதை அவ்வப்போது சரிசெய்துதான் கொடுக்கிறோம். நேரடியாக புதுக்கோட்டை நகராட்சிக்கென்றில்லாமல், வழியோரம் இருக்கின்ற கிராமங்களுக்கும் சேர்த்து தண்ணீர் கொடுக்கிறோம். விராலிமலை போன்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தின்மூலம் தண்ணீர் சென்றுகொண்டிருக்கிறது. எனவே, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு, ஏற்கெனவே இருந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட பைப்புகளை ரூ.75.6 கோடி செலவில் மாற்றிக் கொடுத்து, 12 மில்லியன் லிட்டர் குடிநீர் முழுவதையும் உறுதியாகக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது. அதைத் தாண்டி, புதுக்கோட்டைக்கு கிட்டத்தட்ட 642 கோடி ரூபாய் செலவில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படவிருக்கிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கிடைக்கப் பெற்றவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, நிதிநிலைக்கேற்ப அதை விரைவாகச் செய்வதற்கு இந்தத் துறை முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 13]

7 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்குகின்ற இடங்களில் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை என்றுகூட இல்லாமல் நாள்தோறும் குடிநீர் வழங்குவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை நகரத்தைச் சுற்றியுள்ள ஏரிகள் வற்றாத நிலையில் இருக்கின்றன. புதிய கிணறுகளை அமைத்து, அந்தக் கிணறுகளின்மூலம் நீரைச் செறிவூட்டி குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இன்னும் இரண்டு, மூன்று மாத காலத்தில் குடிநீர்ப் பிரச்சினை சரிசெய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்குட்பட்ட கோவை தெற்கு தொகுதி, மசால் லே-அவுட் பகுதியில் கிட்டத்தட்ட 300 குடும்பங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு வெகு நாட்களுக்கு முன்பாக அமைக்கப்பட்ட குளத்திலிருந்து சங்கனூர் பள்ளத்திற்குப் போக வேண்டிய கால்வாயில் ஆக்கிரமிப்புகள் ஒருபுறம் இருப்பதால், அதை முழுவதுமாகத் தூர் வார முடியவில்லை. மாநகராட்சியின்மூலம் அதற்காக தனித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால், அதை முறையாகத் தூர் வாரி, அந்தப் பகுதி மக்களுக்கு அந்த இடத்தை, சுகாதாரமாக பேணக்கூடிய அளவிற்கு மாற்றித் தரும்படி தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கால்வாயைத் தூர்வார முடியுமா என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே மாநகராட்சிகள் மூலமாக அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இருக்கிற பிரச்சினை என்னவென்று*

சொன்னால், அதன் ஓரத்தில் மக்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு இடம் தந்த பிறகுதான், அதை எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக, அந்த இடங்களை அவர்களுக்கு உருவாக்கித் தந்துவிட்டுத்தான், அந்தப் பணியைச் செய்ய முடியும். இல்லையென்றால், நீங்களேகூட நாளைக்கு காலையில், 'அதை காலி செய்யக் கூடாது' என்று ஒரு போராட்டம் செய்தாலும் செய்வீர்கள். ஏற்கெனவே நீங்கள் கோயம்புத்தூரில் ரோடு எல்லாம் சுத்தமாக சரியில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு பொறுப்பு அமைச்சர் அவர்களின் பேட்டியைப் பார்த்தேன்— மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, கோயம்புத்தூருக்காக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னார். இப்போது 72 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. இன்னும் 130 கோடி ரூபாய் சேர்த்து விரைவில் அடுத்த மாதத்திற்குள்ளாக கோவையில் இருக்கும் அத்தனை சாலைகளையும் புதுப்பிப்பதற்காக 200 கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கப்பட இருக்கிறது.

நீங்கள் சொன்னதுபோல, தூர் வாரும் பிரச்சினை எல்லா நகரங்களிலும் இருக்கிறது. எல்லா பெரிய நகரங்களிலும் கழிவுநீர் ஓடையில் அதிக அளவில் அந்தப் பிரச்சினை இருக்கிறது. இப்போது ஆங்காங்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றி, கழிவு நீரை அதில் கொண்டு சென்று, அதை STP மூலமாக சுத்தம் செய்து, மீண்டும் அதைத் தருகிற பணியையும் ஒவ்வொரு நகரத்திலும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை கவனித்து, ஆணையரோடு கலந்துபேசி, விரைவாக அதைச் செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைக் கூறிக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 13]

திருவள்ளூர் நகரம், மிக வேகமாக வளர்ந்து வரக்கூடிய நகரம். அதைச் சுற்றியிருக்கக்கூடிய கிராமப் பகுதிகளெல்லாம் இன்றைக்கு நகரப் பகுதிகளாக மாறி வந்துகொண்டிருக்கின்றன. அதனால், திருவள்ளூர் நகராட்சியைப் பெருநகராட்சியாகத் தரமுயர்த்தி, புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்ட நகராட்சிகளுக்கு 2 கோடி ரூபாயும், புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சிகளுக்கு 10 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கி, ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. இதுமாதிரி நீண்ட காலமாக இருக்கின்ற நகராட்சிகளுக்கு புதிய கட்டடங்கள் வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை கவனத்தில் கொண்டு, நிதிநிலைமைக்கேற்ப, இந்த ஆண்டு செய்ய முடியுமானால், அதைச் செய்து தருவதற்கு முயற்சி எடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு தாம்பரத்தை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தியிருக்கிறது. மாநகராட்சி அலுவலகம் கட்டுவதற்கு அரசு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பித்திருக்கிறது. ஆனால், திட்ட மதிப்பீடு 48 கோடி ரூபாயாக இருக்கிறது. 5 மண்டல அலுவலகங்களுக்கும் போதுமான இடவசதி இல்லை. அந்த மண்டல அலுவலகங்களுக்குப் போதுமான நிதியை ஒதுக்கித் தரவேண்டும். இன்றைக்கு தாம்பரம் மாநகராட்சிக்கு 326 புதிய அரசு அதிகாரிகளை, ஊழியர்களை பணி நியமனம் செய்திருக்கிறார்கள். அந்த ஊழியர்களை உடனடியாக பணியமர்த்த வேண்டும். தாம்பரத்தை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தியிருந்தாலும், இன்னும் 2, 3 வருடங்களில் 15 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி, சென்னைக்கு அடுத்து மிகப் பெரிய மாநகராட்சியாக தாம்பரம் வர இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு துணைக் கேள்விதான் கேட்க வேண்டும். நீங்கள், 326 அதிகாரிகளையும் போடச் சொல்லிவிட்டீர்கள். அதற்கடுத்து, '48 கோடி ரூபாய் estimate இருக்கிறது. 10 கோடி ரூபாய் தந்திருக்கிறீர்கள், மீதி பணத்தை எப்பொழுது தருவீர்கள்' என்று கேட்டு அமருங்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. S.R. இராஜா: ஆக, இதையெல்லாம் மனதில் வைத்து, புதிய மாநகராட்சிக்கு மக்கள் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். தாம்பரம், சென்னையை ஒட்டியிருக்கின்ற காரணத்தினால், floating population அதிகமாக இருக்கின்றது. வந்துபோகின்றவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன வேண்டும் என்ற கேள்விக்கு வாருங்கள்.

திரு. S.R. இராஜா: இன்னும் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து, அரசு ஊழியர்களை உடனடியாக பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அனைத்து மாநகராட்சிகளுக்கும் 10 கோடி ரூபாய் புதிய கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது; மீண்டும் பெரிய அளவில் அந்தக் கட்டடங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் சொன்னதை ஒரு குறிப்பாக எடுத்துக்கொள்கிறோம். புதிதாக தொடங்கப்பட்டிருக்கின்ற மாநகராட்சிகளில் மண்டல அலுவலகங்களைக் கட்டுவதற்கான நிதியை இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஒதுக்கித் தருகிறோம். பணியாளர்களை நியமிப்பதற்கு rules and regulations தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு சார்பாக ஒவ்வொரு மாநகராட்சியிலும் எவ்வளவு பணியாளர்கள் வேண்டுமென்று ஒரு குறியீடு தயார் செய்து, அதற்கான அனுமதிக்காக கோப்பு நிதித் துறைக்கு அனுப்பப்பட்டு, நிதித் துறையிலிருந்து தற்போது சட்டத்

2023 ஜனவரி 13]

துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்த பிறகு உடனடியாக மாநகராட்சிகளுக்கு பணியாளர்களை நியமித்துத் தருவோம். ஓரிரு வாரங்களில் வந்துவிடும் என்று கருதுகிறேன். எனவே, விரைவிலேயே உங்களுக்கு பணியாளர்கள் வந்து சேர்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் தொகுதியில், திருப்பெரும்புதூர் பேரூராட்சி, மாங்காடு நகராட்சி, குன்றத்தூர் நகராட்சி ஆகியவை உள்ளன. ஒரு மாநகராட்சி அமைக்க எவ்வளவு மக்கள்தொகை வேண்டுமோ, அதற்கும் அதிகமான மக்கள்தொகை அங்கு இருக்கிறது. ஆகையால், இவற்றையெல்லாம் இணைத்து மாநகராட்சியாக அறிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 490 பேரூராட்சிகள் இருக்கின்றன; 138 நகராட்சிகள் இருக்கின்றன; 21 மாநகராட்சிகள் இருக்கின்றன; 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகள் இருக்கின்றன; 382–க்கும் மேற்பட்ட பஞ்சாயத்து ஒன்றியங்கள் இருக்கின்றன; 37–க்கும் மேற்பட்ட மாவட்ட ஊராட்சிகள் இருக்கின்றன. உள்ளாட்சித் தேர்தல் முடிகிறபோதுதான் அவற்றில் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஏனெனில், அதற்குள் யாரேனும் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டால், அதை நடைமுறைப்படுத்த இயலாது.*

தற்போது செம்மஞ்சேரி பகுதியை எடுத்துக்கொண்டால், அது இன்னும் ஊராட்சியாகத்தான் இருக்கிறது. ஆனால், அங்கு குடியிருப்போரின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கிறது. இது 2 துறைகள் சம்பந்தப்பட்டது. எனவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, 2 துறைகளின் அதிகாரிகளையும் இணைத்து—ஒரே ஊராட்சி என்று

வருகிறபோது, ஒவ்வோர் ஊராட்சியிலும் இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும் என்ற ஒரு கணக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 40 ஆயிரம் வாக்குகள் உள்ள ஊராட்சிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, ஊராட்சிகளைப் பிரிப்பதற்கும், ஒன்றியங்களை அதிகரிப்பதற்கும், பேரூராட்சிகளை அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க மூத்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு Committee-ஐ அமைத்து, அவர்கள் மூலமாக இந்த மாதிரிதான் இருக்க முடியும் என்கிற ஒரு நிலையை எடுக்கவிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் பேசியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் பேசி Committee அமைத்தால், எங்கெங்கெல்லாம் மக்கள்தொகை அதிகமாக இருக்கிறதோ, அதற்குத் தகுந்தாற்போல், பேரூராட்சி என்றால், இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும்; நகராட்சி என்றால், இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும்; மாநகராட்சி என்றால், இவ்வளவு மக்கள்தொகை இருக்க வேண்டும் என அறுதியிட்டு, Committee அறிக்கை தந்த பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

22—

கலைக் கல்லூரி

***7442—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் பகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கம் பகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல்